கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/சிறப்பு நீதிபதி
இராமநாதபுரம் அவர்கள் முன்பாக

**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**
**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**C** 8165115

1. District மாவட்டம்: இராமநாதபுரம் | PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு: 2024 | FIR No.: மு.த.அ. எண்: 10/24 | Date: நாள்: 16.05.2024

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act 2018 | Sections பிரிவுகள்: 7(a) of PC Amendment Act 2018

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 16.05.2024 சுமார் 10.00 மணி, காலை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.05.2024 | Time : நேரம் 12.15 மணி, மதியம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுத் - I | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 70 கி.மீ. வடகிழக்கில்

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — தொண்டி காவல் நிலையம் தொண்டி.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — பா. வேல்முருகன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — பாலசுப்பிரமணியன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 42/2024 | (d) Nationality : நாட்டினம் — இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் — ஓட்டுநர் | (g) Address : முகவரி — 11/1E1, பெருமானேந்தல், தொண்டி, திருவாடானை தாலுகா, இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   இராம கிருஷ்ணன்
   சிறப்பு சார்பு ஆய்வாளர்
   தொண்டி காவல் நிலையம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் ஏதுமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 16.05.2024ம் தேதி அலுவலில் இருந்தபோது வாதி கொடுத்த புகார் மனுவை 12.15 மணிக்கு பெற்று புகார்தாரர் மற்றும் எதிரி திரு.இராமகிருஷ்ணன் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 10/2024 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன்படி இன்று 16.05.2024ம் தேதி 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு. அனுப்புநர் பா.வேல்முருகன், வயது 42/2024, த/பெ பாலசுப்பிரமணியன், 11/1E1, பெருமானேந்தல், தொண்டி, திருவாடனை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13. [signature] 16/5/24 — [signature] 16/5/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16. 05. 2024. 13.00. மணி

Name: பெயர் மு. குமரேசன்
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ஊ.த.க. பிரிவு இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 10/2024 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

ஒழிப்புத்துறை, இராமநாத்புரம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது மனைவி விஜியை எனது சித்தப்பா பழனிவேல் மகன் முகேஸ் என்பவர் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு இரண்டு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்ற விசயம் எனக்கு 12.5.2024ஆம் தேதி தெரிய வந்ததால் நான் அன்று இரவு சுமார் எட்டு மணிக்கு முகேசிடம் விபரம் கேட்டு விட்டு வீட்டுக்கு வந்துட்டேன். இரவு சுமார் 10.30 மணிக்கு நான் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது மேற்படி முகேஸ் மற்றும் நான்கு நபர்களுடன் வந்து என்னை கட்டையால் சர்மாரியமாக தாக்கினார்கள். அதன் பின்பு உடனடியாக தொண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது புகாரை பெற்றுக்கொண்டு மறுநாள் காலையில் வரச்சொன்னதின் பேரில் கடந்த 13.05.2024ஆம் தேதி காலையில் போன போது சாயங்காலம் வரச்சொன்னாங்க. நான் மீண்டும் அன்று சாயங்காலம் தொண்டி காவல் நிலையம் சென்ற போது அங்கு பணியில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமகிருஷ்ணன் இரண்டு தரப்பினரிடமும் விசாரித்து சமரசமாக போகச்சொன்னார். ஆனால் அவரது விசாரணை ஒருதலை பட்சமாக இருந்ததால் பின்பு நான் கொடுத்த புகாருக்கு வழக்கு பதிவு செய்ய வேண்டி விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். பின் 14.05.2024 ஆம் தேதி காலையில் தொண்டி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. இராமகிருஷ்ணன் என்பவர் இரண்டு முறை செல்போன் நம்பர் 9092421527 லிருந்து எனது செல்போனுக்கு போன் செய்து சமரசமாக போய்விடலாம் எனக்கூறி மீண்டும் விசாரணைக்கு வருமாறு அழைத்தார். ஆனால் அன்றைக்கு நான் முக்கிய வேலை சம்மந்தமாக வெளியில் இருந்ததால் என்னால் விசாரணைக்கு செல்ல முடியவில்லை. அதன் பிறகு நான் மேற்படி பிரச்சனை சம்மந்தமாக 15.5.2024ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தேன். அதனை பெற்ற அங்கிருந்த காவலர் ஒருவர் என்னை தொண்டி காவல் நிலையத்திற்கு மீண்டும் போகச்சொன்னதின் பேரில், அன்று மாலை தொண்டி காவல் நிலையம்

சென்றேன். அப்போது அங்கு பணியில் இருந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமகிருஷ்ணன், முகேஸ் என்பவர் என்மேல் கொடுத்த புகார் சம்மந்தமாக என் மீது வழக்கு பதிவு செய்திருப்பதாக கூறி என்னை பெயிலில் விட எனது ஆதார் கார்டு மற்றும் இரண்டு சாட்சிகளுடன் வருமாறு சொன்னதின் பேரில் நான் வீட்டிற்கு வந்து எனது ஆதார்கார்டு எனது அப்பா மற்றும் எனது நண்பரை அழைத்துக் கொண்டு சென்றேன். அப்போது சிறப்பு சார்பு ஆய்வாளர் இராமகிருஷ்ணன் என்னை தனியாக அழைத்து கோட்டுக்கு போய் பெயிலு எடுக்கணும்முன்னா உனக்கு ரூ.10,000/-க்கு குறையாம செலவாகும் அதனால ஸ்டேசன் பெயில விடுவதற்கு நான் ஏற்பாடு செய்றேன் எனக்கு நீ ரூ.3,000/- கொடு எனக்கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று கூறினேன். ஆனாலும் அவர் அதற்கு நாளைக்கு (16.05.2024) பணத்தை கொடு எனச்சொல்லி என்னை ஒரு சில பதிவேடுகளில் கையெழுத்துக்களை பெற்றுக்கொண்டு அனுப்பி விட்டார். இன்று 16.05.2024 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு மீண்டும் ஒரு முறை அவரை சந்தித்து பணம் கொடுக்க இயலாது என்று சொல்லுவதற்காக தொண்டி காவல் நிலையம் சென்றபோது அவர் அங்கு இல்லை எனவே அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு காவல் நிலையம் வந்த விபரத்தை கூறியபோது நான் இப்போது வேற வேலைக்காக வெளியில் இருக்கிறேன் மதியத்திக்கு மேல் வந்திருவேன் என்று கூறினார். நான் அவரிடம் நீங்க கேட்ட பணத்தை கொடுக்குறது கஷ்டம் அதனால எனக்கு நீங்களா பாத்து ஏதாவது நியாயம் பண்ணுங்க என்று சொன்னேன். அதற்கு அவர் இன்ஸ்பெக்டர் உன் மேல எப்.ஐ.ஆர் போட சொல்லிட்டாங்க நான் தான் சமாலிச்சு மனுரசீதோட முடிக்கிறதுக்கு ஏற்பாடு செஞ்சிருக்கேன். உன் மேல உள்ள புகாரை ஒன்னுமில்லாம ஆக்கணும்முன்னா நான் ஏற்கனவே கேட்ட பணத்தை கொடுத்துரு என்று கராராக கேட்டார். பின்னர் நானும் வேறு வழியில்லாமல் நான் வண்டி ஓட்டிக்கிட்டு கஷ்டப்படுறேன் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை ரூ.2,000/- கூட ஏற்பாடு பண்றதுக்கு கஷ்டம் எனச்சொன்னேன். அதற்கு அவர் சரி பரவாயில்லை மதியத்திற்கு மேல அந்த ரூபாயாவது கொண்டு வந்து

என்னைப் பாரு எனக்கூறினார். பின்பு, நான் யோசித்து பார்த்து அரசு பணியை செய்வதற்காக என்னிடம் பணம் கேட்ட தொண்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமகிருஷ்ணன் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் ரூ.2,000/- கேட்ட தொண்டி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமகிருஷ்ணன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (பா.வேல்முருகன்) 16.05.2024 Received the complaint on 16/05/2024 at 12.15 hrs and Enquired the character and Antecedence of the complainant and Accused and registered a case in Ramanathapuram V&AC Crime No.10/2024 u/s 7 (a) of PC (Amendment) Act, 2018 at 12.30 hrs. (Sd) M.Kumerasan, Inspector of Police, V&AC, Ramnad 16/05/2024. இதன் முதல் தகவல் அறிக்கை அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

16/5/2024

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.